செய்தித் தாளாகப் பதிவு பெற்றது

வெள்ளிக்கிழமைதோறும் வெளி வருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

பிரதி விலை: சதம் 15

சைவபரிபாலன சபை வெளியீடு.

ஆரம்பம் : விரோதி ளு (1889) ஆவணி மீ 28உ, அச்சகம் : சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்- அஉ] யாழ்ப்பாணம்:- சாதாரண ளு தை மீ கூஉ வெள்ளிக்கிழமை (22-1-1971) [இல-சஉ


## தக்ஷிண கைலாச மான்மியம்

[ "சிவாகம ஞான பாநு
சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள், அச்சுவேலி]
(முன் வளர்ச்சி — 5)

### 11-வது கதிர்காம தல விசேடம்

**கதிர்காமநகர்ச் சிறப்பு**

கதிர்காம நகரம் முக்கோணமான வீதியை உடையது. கதிர்காம நகரத்தின் நடுவிலே பவளத் தூண்கள் நிறுத்தி பொன்னுலியற்றி இரத்தினங்கள் இழைத்துத் திவ்வியமாகிய சோதி மண்டபம் ஒன்று இருக்கின்றது. அந்த மண்டபத்தின் நடுவிலே இந்திர நீலமணியினுல் செய்து பிரகாசம் பொருந்திய சிங்காசனத்தின் மீதே வள்ளிநாயகி தெய்வதயானை அம்மை என்னும் இரு சத்திமார்களோடு ஞானசத்தியாகிய வேற்படையைத் தரித்துக் கதிர்காம நாதர் விளங்குகின்றார்.

அச்சோதி மண்டபத்திற்கெதிரே எல்லா லக்ஷணங்களும் வாய்ந்த வள்ளியம்மை மண்டபம் இருக்கின்றது, அதன் அருகிலே மேன்மை பொருந்திய சமாதியோக மண்டபமொன்றுள்ளது: விநாயகருக்கும் பரமசிவனுக்கும் வெவ்வேறு மண்டபங்கள் உள்ளன. வீரவாகு தேவர் முதலிய வீரர்களுக்குரிய மண்டபங்களும் உள்ளன.

இந்த ஆலயத்துக்குத் தென் திசையிலே பிராமணர்களுக்குரிய இருக்கைகள் உள்ளன. மேற்குத் திசையிலே சமய விசேஷ நிருவாண தீட்சை பெற்ற சமயி, புத்திரர் சாதகர் என்னும் சைவர்களுக்குரிய சித்திர மண்டபங்கள் இருக்கின்றன. வட திசையிலே திருக்கல்யாண மண்டபம் உள்ளது. சிவ கைங்கரியங்களைச் செய்யும் அந்தணர் முதலியவர்களுக்கும் ஏனைய வருணத்தவர்களுக்குமுரிய இருப்பிடங்களும் இருக்கின்றன.

**மாணிக்ககங்கை**

கதிர்காம நகரத்திலே புண்ணிய நதியாகிய மாணிக் ககங்கை பாய்ந்து கிழக்குக் கடலை நோக்கிச் செல்லுகின்றது. சந்தனம், அகில் முதலியவைகளையும் அலைக்கரங்களால் அள்ளிக் கொண்டு செல்லும் இரத்தின நிறமுள்ள பலவகை மீன்கள் இக்கங்கையில் வசிக்கும் தெளிந்த நீருள்ளதாய் மன மகிழ்ச்சி அளிப்பதாய் இருக்கும், பகையில்லாது வாழும் யானை முதலிய மிருகங்களையும், குயில் முதலிய பறவைகளையும், பெரிய மலைச் சோலைகளையும் தன்னிடத்துக்கொண்ட இருகரைகளையுடையது. மிக வேகமின்றி மெல்லெனச் செல்லுமியல்புடையது. பிரமா, விட்டுணு, உத்திரன் என்னும் மூத்தேவர்களும், அவர்களது சத்திமார்களான சரசுவதி, லக்குமி உமை என்பவர்களுடனும், பதினெண் கணங்களுடனும், மாணிக்கங்கா தீரத்தில் வாசஞ்செய்கின்றனர்.

பாண்டிநாடு, சேரநாடு, சோழநாடு, கொங்கண தேசம், தெலுங்கு முதலிய தேசங்களிலுமிருந்து நான்கு வேதங்களையும் உணர்ந்த பிராமணர் முதலியோர் தத்தம் மனைவிமாரோடு வந்து கதிர்காமத்தில் வசித்து இப்புண்ணிய நதியில் நியமமாக ஸ்நானம் செய்து நித்திய கன்மமுடித்துக் காமேசன் என்னும் பெயருள்ள பெருமானை வணங்கித் துதித்து பல விரதங்களை அனுட்டித்துக் கொண்டு இஷ்டசித்திகளை இப்பொழுதும பெற்று வருகின்றனர், கதிர்காமநாதருடைய மகிமையினுலே மாணிக்க கங்கையிலே ஸ்நானம் பண்ணித் தலவாசமும் மூர்த்தி தரிசனமும் செய்தவர்கள் விரும்பிய போகங்களையெல்லாம்பெற்று ஆனந்தமாய் வாழ்வார்கள். (வளரும்)

---


இலங்கைப் பல்கலைக் கழகக்

### குறிஞ்சிக் குமரன் கோயில்

ஷ கோயில் அலங்கார உற்சவம் 31-1-71 முதல் 9-2-71 வரை நடைபெறும். ஒவ்வொரு உற்சவத்துக்கும் உபயகாரர் சேர்க்கப்பெற்றிருக்கின்றனர். தினமும் காலை 9 மணி முதல் 11-30 மணி வரை விகழுர், அபிஷேகாராதனை மாலை 5-30 மணி. விசேட பூசை 8-30 மணி திருவீதியுலா. தைப்பூசத்திலன்று பல்கலைக் கழக இந்துமாணவர் உபயம்.


---

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

தொண்டனேன் பட்டதென்னே
தூயகாவிரி யினன்னீர்
கொண்டிருக் கோதியாட்டிக்
குங்குமக் குழம்புசாத்தி
இண்டைகோண் டேறநோக்கி
யீசனையெம்பிரானைக்
கண்டனைக் கண்டிராதே
காலத்தைக் கழித்தவாறே?
திருச்சிற்றம்பலம்

-திருநாவுக்கரசுசுவாமிகள்.

---

### சைவசித்தாந்த மகாசமாஜம் சென்னை

ஷ சமாஜத்தின் 65ம் ஆண்டு நிறைவு விழாவும் பொதுக் கூட்டமும்; அவற்றின்அங்கமாகவுள்ள சைவர், சைவ மங்கையர், சைவ இளைஞர் மகாநாடுகளும், 17, 18-1-71 ஆகிய ஞாயிறு, திங்கட்கிழமைகளில் வேலூர் துக்காரம்பஜனைக் கோயிலுள்ள மெரினகபே V. K விநாயகமுதலியார் கல்யாண மண்டபத்தில் நடைபெற்றன. ஆட்சிச்சொல் காவலர் திரு. கீ இராமலிங்கனர் எம். ஏ, சைவர் மகாநாட்டுக்கும்; பழனியாண்டவர் மகளிர் கல்லூரி முதல்வர் திருமதி ந சரோஜினிதேவி எம். ஏ. சைவர் மங்கையர் மகாநாட்டிற்கும், தாம்பரம் கிறித்தவக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. க. வடிவேலாயுதம் எம். ஏ சைவ இளைஞர் மகாநாட்டிற்கும் தலைமை வகித்தனர். வழமை போல் சிறந்த அறிஞர்களுடைய விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டன

### யோக சாதனைக்கு ஊக்கமளித்தல் வேண்டும்,

யோகிராஜ் சுவாமி சித்தானந்தஜிக்கும் அவருடைய அமெரிக்க ஆத்மயோக சீடர்களுக்கும், யாழ்ப்பாணம் திவ்விய ஜீவன சங்க நிலையத்தில் வரவேற்பும், பாராட்டும் அளிக்கப்பெற்றன. மனிதன் இன்ப நிலையடைவதற்கு உடல்நிலை ஸ்திரப்படவும் யோகசாதனை உதவிபுரியுமென சுவாமிகள் கூறினர்கள். திவ்விய ஜீவன சங்கத் தலைவர் திரு எஸ். தனபாலசிங்கம், காரியதரிசி திரு. எஸ். கனகரத்தினம், முதலியார் சே. முத்துத்தம்பி, ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் திரு. கே. பி ஹரன் முதலியோரும் பாராட்டுரை வழங்கினர்கள்.

---

மெய்யாகள் நெஞ்சம்

### பீம ஏகாதசி ?

மாசி பீம ஏகாதசி தினத்தை ஸ்ரீ வல்லிபுரக் கோவிலில் மாசி சுக்கிலபக்ஷம் 23-ம் தேதியில் அநுட்டிப்பதாகவும், கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வரர் கோவிலில் தைமாதம் 24ம் திகதி அநுட்டிப்பதென்றும் இரகுநாதையர் வாக்கியம் தெரிவிக்கின்றது. அடியார்கள் எத்தினத்தில் குறித்த விரதத்தை அநுட்டித்தல் வேண்டுமென்பதை அறிஞர்கள் தெரிவிப்பார்களாக.

21-1-71 —ஒரு பக்தன்

---

## சைவ உலகுக்கு ஒரு வேண்டுகோள்

'யாரோ! இவர்' :-

வயசெண்பத் தைந்துக் கப்பால்
வயிறொட்டி யென்புக் கூடாய்
உயிர்சற்றும் தரிக்க லாற்று
உடலினில் உயிர்ப்பு வீங்க
அயல்மற்றோ ருதவி யின்றி
அலமந்தார் அழுதார் சோர்ந்தார்
இயல்மற்றென் என்பேன் யாரோ!
இவர்இரத் தினேசு வரையர்.

— பண்டிதமணி. சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

[17-1-71 சனிக்கிழமை பண்டிதர் புலவர்மணி வ. மு. இரத்தினேசுவர ஐயர் அவர்கள் பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளையவர்களிடம் சென்று தமது நோயுற்ற உடல் நிலைமையினையும் ஆதரவின்மையையும் விளக்கினர்கள். பண்டிதமணியவர்கள் அவருடைய பரிதாபமான நிலைமையைக் கண்டு மேற்குறித்த செய்யுளை எமது பத்திரிகையில் பிரசுரஞ் செய்யுமாறு அனுப்பியுள்ளனர். அந்தியகாலத்தில் ஐயரவர்களை போஷிக்க வேண்டியமை தமிழ்மக்கள் கடமையாகும் அன்பர்கள் தாங்கள் உதவ விரும்பும் நிதியை பண்டிதமணியவர்களுக்கு அனுப்பி வைப்பார்களாக ] —பத்திராதிபர்

---

## .......... உனை நான் மறப்பேனோ?

இராகம் : பைரவி :: தாளம்: ஆதி

பல்லவி

எத்தனை ஜென்மம் இங்கு வந்தாலும்
அத்தா உனைநான் மறப்பேனோ — இனி (எத்)

அநுபல்லவி

உத்தமி பாகா கற்பகத் தியாகா
நித்யகல் யாண நிர்மல யோகா (எத்)

சரணம்

தாயாகி எம்மைத் தழுவி வளர்த்தாய்
சஞ்சலம் தீர்த்துத் தஞ்ச மளித்தாய்
ஓயாம லாடி ஓமெனும் வீதி
உள்ளே நிறைந்தாய் உன்னத சோதி. (எத்)

—அளவையூர். "அருட்கவி" சி. விநாசித்தம்பிப் புலவர்

---

## சிதம்பரம் நாவலர் கல்விப் பணிக்கு நிதியுதவிய அம்மையார்

வண்ணார்பண்ணைச் சைவச் சீலரும் சிவபூஜா துரந்தரர் காலஞ்சென்ற விநாசித்தம்பி அவர்களின் பிரிய பத்தினியும், வடகோவை திரு. அருணாசலம் பிள்ளை அவர்களினதும், சென்னை வித்தியானுபாலன அச்சியந்திரசாலை, சிதம்பரம் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை ஆகியவற்றின் தரும பரிபாலகராகயிருந்த திரு. ச. விசுவநாதபிள்ளை அவர்களின் சோதரியுமான திருவாட்டி சிவ ஞானப்பூங்கோதை அவர்கள் சென்ற 18-1-71 வடகோவையிலுள்ள அவர்களது இல்லத்தில் தமது 76வது வயதில் சிவமூல மந்திரம் செவிகளில் ஒலிக்க. திருமுறை அடிகள் முழங்க, கங்கர் தீர்த்தம் உமிழ்ந்த வண்ணம் குஞ்சித பாதநிழலை அடைந்தார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் அவரது மருமகன் நாவலப்பிட்டி இந்து வாலிபர் சங்க உபதலைவர் திரு அ. சபாபதிப்பிள்ளை அவர்களால் உற்றர், உறவினர், நண்பர்கள் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றன.

திருமதி சிவஞானப்பூங்கோதை அம்மையார் அவர்கள் சிறுபராயத்தில் சிலகாலம் சிதம்பரத்தில் தமது சிறிய தந்தையாராகிய, நாவலரின் நன்மாணாக்கரும், மருகருமாகிய ஸ்ரீ ச. பொன்னம்பலபிள்ளை அவர்களிடம் இருந்து வளர்ந்தவர். எனவே இறுதிக் காலம் வரை நாவலர் நெறி நின்று சமயாஅனுஷ்டானங்களை முறையாகச் செய்து தவவாழ்க்கை மேற்கொண்டவர். செய்த தருமங்களோ பல. அருமைக்கணவன் பெயரால் சிதம்பரம் நாவலர் வித்தியாசாலைக்கு அக்காலத்தில் ரூபா 1000/- நன்கொடை கொடுத்துதவியவர்.

வாழ்க அவர் திருநாமம்! வளர்க 'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற முறையான அவர் திருத்தொண்டு!

---

THE SAIVAPRAKSA PRESS

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சாதாரண ஹு தை மீ கூ-உ வெள்ளிக்கிழமை [1971]

# நல்லிணக்கம் உண்டாகுக

இலங்கை மகாதேசாதிபதியவர்களுக்கு யாழ்ப்பாண மக்கள் இன, மத, பேதமின்றித் தங்கள் மரபிற்கேற்ற வண்ணம் பிரமாண்டமான வரவேற்பை 16-1-71 சனிக்கிழமையன்று அளித்தார்கள். யாழ்ப்பாணத்தில் மஸ்கேலியா மின்சார விநியோகத்தை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தபொழுது அவர் சிறந்த சிந்தனைக்குரிய கருத்தை வெளியிட்டனர். "நான் ஆரம்பிக்கும் மின்சாரத் தொடர்பு நாட்டில் ஒளியையுண்டாக்குவதோடமையாது வறுமையை நீக்குதற்கும் உதவியாகவிருக்கும், விவசாயம், கைத்தொழிலபிவிருத்தியைப் பெருக்கி வளத்தையும் உண்டாக்கும். இவற்றுக்குமேலாக நமது நாட்டில் வாழும் மக்களுக்கிடையில் நல்லிணக்கத்தையும் உண்டாக்குவதற்கு இந் நிகழ்ச்சி ஒரு மதித்தற்கரிய சின்னமுமாகும்"

நாட்டிலுள்ள சகல மக்களும் நல்லிணக்கத்துடன் வாழ்தலை தேசாதிபதியவர்கள் குறிப்பிட்டமை போற்றத்தக்கது. நல்லிணக்கந்தான் நாட்டின் வறுமையைப் போக்கத் தக்கது. நல்லிணக்கத்தைப் பாதிக்கின்ற தீய சக்திகளை அறிந்து அவற்றைப் போக்குதற்குரிய வழி வகைகளைத் தேசாதிபதியவர்கள் ஆராய்ந்து தமது மந்திரிமார்களுக்கு விளக்குவார்களானால் அச்செயல் அவருக்குப் புகழையும் புண்ணியத்தையும் நல்கும். சுயநலம், பகை, பழிக்கஞ்சாமை, கோபம் முதலிய தீய குணங்கள் மனிதன் உள்ளத்தில் இருளடையச் செய்யும். அன்பு, பரோபகாரம், நீதிமுதலிய குணங்கள் மனிதனுடைய உள்ளத்தில் ஒளியையுண்டாக்கும். மின்சார இணைப்பினால் பூதவிருள் நீங்கும். நற்குணங்களால் அகவிருள் நீங்கும். அகவிருள் நீங்கினாற்றான் நாட்டில் நல்லிணக்கம் உண்டாகும். நல்லிணக்கம் இன்பத்தை நல்கும். அஃதில்லாமை அல்லலைப் பெருக்கும்.

நேயர் நெஞ்சம்

# திருக்கேதீச்சுர புராண படனம்

## ஸேர். கந்தையா வைத்தியநாதன் விருப்பம் பூர்த்தியானது

காரியதரிசி, திருஞானசம்பந்தர் மடாலய பரிபாலனசபை, வேலணை.

ஐயா!

திருவருளை முன்னிட்டு, அச்சுவேலி, சிவாகம ஞான பாநு சிவஸ்ரீ. ச. குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள் திருக்குமாரன் சிவஸ்ரீ கு. வைத்தீசுவரக் குருக்கள் ஈழ நாட்டிலிலுள்ள தேவாரம் பாடப்பெற்ற திருத்தலங்களுளொன்றாகிய திருக்கேதீச்சரமென்னும் சிவதலத்தின் வரலாற்றையும் புகழையும் விளக்கும் முறையில் இயற்றிய "திருக்கேதீச்சரப் புராணம்" என்னுஞ் சிறந்த நூலை உங்கள் சபை வெளியிட்டமைக்கு யாவரும் நன்றி தெரிவித்தல் வேண்டும். நூலில் இலங்கையின் சிறப்பு, மூர்த்தி தல விசேடங்கள்; திருக்கேதீச்சர வரலாறு, சிவார்ச்சனைக் கிரமம், பாலாவித் தீர்த்த மகிமை குருகுலம் உற்சவ மகிமை முதலியன பக்திச் சுவையுடன் இனிய தமிழ் நடையில் பாடப் பெற்றிருக்கின்றமை யாவரும் இலகுவிற் கற்று கௌரியம்பாள் சமேத கேதீச்சுரநாதன் திருவருளைப் பெறுதற்கு அருந் துணைபுரியும்.

நூலின் முற்பகுதியில் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் சுந்தரமூர்த்திநாயனார் ஆகிய இருவரும் பாடியருளிய தேவாரப் பதிகங்களை வித்துவசிரோமணி பொன்னம்பலம்பிள்ளையவர்கள் உரையுடன் பிரசுரஞ் செய்தமை, அவற்றை அடியார்கள் ஓதி இம்மை, மறுமை வீட்டுப் பயன்களைப் பெறப் பேருதவியாக விருக்கும்.

சாதாரண ஹு கார்த்திகைத் திங்கள் 2-ஆம் நாள் (11-12-70) வெள்ளிக்கிழமை திருக்கார்த்திகையிலன்று ஷை புராணத்தை விசேஷ அபிஷேகராதனைகளுடன் சிறந்த புலவர்கள் உதவியுடன் ஷை தலத்தில் திருக்கேதீச்சுர புராணத்தை அரங்கேற்றினமையும் ஷை தலத்தின் வரலாற்றில் ஒரு சிறந்த நிகழ்ச்சியுமாகும்.

உங்கள் சபை வருடந்தோறும் வரும் திருக்கார்த்திகையிலன்று குறித்த புராணத்தை சிறந்த வித்துவான்களை அழைத்துப் படித்துப் பயன் சொல்ல ஒழுங்குசெய்தல் சிறந்த சிவ தொண்டாகும். கேதீசுவரநாதனுடைய திருவருள்நாட்டில்செறியும்.

திருக்கேதீச்சுர புனருத்தாரணச் சபைத் தலைவராயிருந்து அருந்தொண்டாற்றிய சைவப்பெரியார் சேர். கந்தையா வைத்தியநாதன் இந்நூலினை தங்கள் சபையினது சார்பில் வெளியிடயெண்ணியிருந்தனர். அவருடைய பிரிவினால் அவ்விருப்பம் கைகூடவில்லை. உங்கள் சபை அவருடைய எண்ணத்தைப் பூர்த்தி செய்துள்ளது.

இங்ஙனம்
ச. அம்பிகைபாகன்

[வண்ணை, வைத்தீஸ்வர வித்தியாலயத்தினது இளைப்பாறிய அதிபரும் திருக்கேதீச்சரப் புனருத்தாரண சபையின் நிருவாகசபை உறுப்பினருமாகிய திரு. ச. அம்பிகைபாகன் அவர்கள் கௌரியம்பாள் சமேத திருக்கேதீச்சரநாதனின் அருளை மக்கள் பெறுதற்கு ஊக்கமளிக்கக்கூடிய விஷயத்தை இக்கடிதத்திலமைத்திருப்பதனாலதனை இப் பத்திரிகையில் பிரசுரஞ் செய்கின்றோம்.

பத்திராதிபர், ]

# 'அவர்கள் பெருந் தியாகிகள்'

## நாயன்மார்கட்டில் நடந்த பாராட்டுபசாரக் கூட்டம்

(நமதுநிருபர் — "நாயன்மார்கட்டு-நாதன்")

"சென்ற தலைமுறையாசிரியர்கள் பெருந் தியாகிகள். அவர்கள் பாடசாலை முகாமையாளர்களோடு ஒத்துழைத்துக் கல்வித் தரம் உயரப் பாடுபட்டார்கள். தங்கள் உடல், பொருள், ஆவி யாவற்றையும் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவ, மாணவிகளின் உயர்விற்காக அர்ப்பணித்தனர்

இன்று எமது பாராட்டுபசாரத்தைப் பெறும் தலைமையாசிரியர் திரு. ஆ. இளையதம்பி, உதவியாசிரியர்கள் திருவாளர்கள்: க முத்தையா, ச. சின்னத்துரையாகியோர் மேற் குறித்த இனத்தில் வந்தவர்கள் கோட்டிலாகத் தொடங்கிய மகேசுவரி வித்தியாசாலை. இன்று இருபதுக்கு மேற்பட்ட ஆசிரியர்களையும், எழுநூற்றுக்கு மேற்பட்ட மாணவ மாணவிகளையும்கொண்டதாய், ஆரம்பக் கல்வித் தரத்தில் யாழ்ப்பாணத்திலேயே தலைசிறந்ததாய் விளங்குகின்றதென்றால் அந்தப் பெருமை தலைமையாசிரியருக்கும். இப்பாடசாலையின் ஆரம்ப நாள் முதல் இங்கு அரும்பணியாற்றி வரும் ஆசிரியர் திரு. க. முத்தையா அவர்களுக்குமே உரியது"

இவ்வாறு யாழ். நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையிலே பல்லாண்டுகளாய் அரும்பணி புரிந்த திரு. ஆ. இளையதம்பி [தலைமையாசிரியர்] திரு. க. முத்தையா, திரு. ச சின்னத்துரை [உதவியாசிரியர்கள்] ஆகியோரின் சேவை நலங்களைப் பாராட்டும் விழாவுக்கு தலைமை வகித்து உரை நிகழ்த்தும்போது திரு. க. சொக்கலிங்கம் ["சொக்கன்"] B A. [தலைவர், சைவ சமய அபிவிருத்திக் கழகம், நாயன்மார்கட்டு] அவர்கள் குறிப்பிட்டார்கள்.

இவ் விழா, சென்ற 11-1-71 திங்கட்கிழமை பிற்பகல் 1-00 மணியளவில் ஆலய வழிபாட்டுடன் ஆரம்பமாகியது. ஷை யூர் ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரியம்பாள் ஆலயத்தில் பூசை, ஆராதனை, ஆகியவற்றைத் தொடர்ந்து ஆசிரியப் பெருமக்கள் மூவரையும் பெற்றோர், பழைய மாணவர், ஆசிரியர்கள், மாணவர்கள் யாவரும் ஒருசேர மங்கல வாத்திய சகிதம் மாலை மரியாதைகளோடு ஊர் வலமாகப் பாடசாலை மண்டபத்துக்கு அழைத்து வந்தனர்.

தேவார பாராயணத்துடன் விழா ஆரம்பமானது. வரவேற்புக் கீதம் ஷை பாடசாலைப் பழைய மாணவிகளால் படிக்கப் பெற்றது. அதையடுத்து, பாடசாலையின் தோற்றத்துக்கு மூலகாரணராயிருந்தவர்களுள் ஒருவரும், ஆரம்பகால முதல் பாடசாலை வளர்ச்சிக்கு உழைத்து வருபவருமாகிய திரு. மெ. சிவகம்பு அவர்கள் வரவேற்புரை வழங்குகையில் குறிப்பிட்டதாவது:—

"மகேஸ்வரி பாலர் ஞானோதய சங்கம்" என்ற பெயரில் ஒரு கழகத்தினை நாற்பதாண்டுகளுக்குமுன்பு நானும், இக்கிராமத்தைச் சேர்ந்த இளைஞர் வேறு சிலருமாகத் தொடங்கினோம்; பிள்ளைகளுக்கு இராப் பாடசாலை நடாத்தி அவர்களின் கல்வியறிவை வளர்த்தோம். இச் சங்கத்தின் முயற்சியினால் மகேஸ்வரி வித்தியாசாலை தோன்றியது"

சைவ வித்தியா விருத்திச் சங்க முகாமையாளர், காலஞ்சென்ற திரு சு. இராசரத்தினமவர்கள் 1935-ம் ஆண்டு தை மாதத்தில் மூந்நூறு ரூபாவை எம்மிடம் பெற்றுக்கொண்டு தரும சீலரான ஆசாரி' மாணிக்கத்தின் உழைப்போடு மூன்று காட்களில் 100 அடி நீளமுள்ள கொட்டிலைப் பாடசாலைக்கெனக் கட்டித்தந்தார். பாடசாலை தொடங்கிய அன்று ஏழு மாணவரே சமுகமளித்திருந்தனர்.

இன்று எமது பாராட்டிற்குரியவராய் இங்கு வீற்றிருக்கும் திரு. க. முத்தையா அவர்கள் "ஆத்தி சூடி அமர்ந்த தேவனை, ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே" என்ற காப்புச் செய்யுளை மாணவர்க்குச் சொல்லிக் கொடுத்து இங்குக் கல்வித் தீபத்தை ஏற்றி வைத்தார். அந்த நாள் தொட்டு இற்றைவரை அது அணையாமல், மேலும் மேலும் பிரகாசமாய் விளங்குவதற்கு அவர் தூண்டுகோலாயிருந்தார். 1937-இல் இங்குத் தலைமையாசிரியராய் வந்த திரு. ஆ இளையதம்பி அவர்கள் கல்வித் தீபத்திற்கு வேண்டிய எண்ணெயை இடைவிடாது வார்த்து ஒளியை வளர்த்து வந்தார். "இவர்களிருவரதும் சேவையை நாயன்மார்கட்டு வாழ் மக்கள் என்றைக்கும் நன்றியோடு நினைவு கூர்வார்கள்"

பரமேசுவரக் கல்லூரிப் பதிலதிபர் திரு. சு. பரநிருபசிங்கம் B. Sc. Dip - in Ed. அவர்களும், திரு. இ. சரவணமுத்து (கி. உ) அவர்களும் வித்துவான். திருவாட்டி. மகேஸ்வரி இராஜேந்திரம், (பழையமாணவி) ஆசிரியர்கள் திருவாளர்கள். செ நமசிவாயம், வ. வேலாயுதபிள்ளை (பழைய மாணவர்கள்) ஆசிரியர் திரு. இ. வேலாயுதபிள்ளை ஆகியோர் ஆசிரியர்களது அரிய சேவைநலங்களைப் பாராட்டிப் பேசினர். பாராட்டுப் பத்திரங்கள் வாசித்தளித்தலும், கையுறை வழங்கலும் நிகழ்ந்த பின்பு பாராட்டுப்பெற்ற மூவரதும் பதிலுரைகள் நிகழ்ந்தன. பாராட்டுவிழாச் செயலாளர் திரு. கு. துரைராசா நன்றியுரை நவில தேவாரபாராயணத்துடன் விழா சிறப்புற நிறைவு பெற்றது. பழைய மாணவ மாணவியர்களும் பெற்றோரும் ஆசிரியர்களுக்குத் தங்கள் வணக்கத்தைத் தெரிவித்து மகிழ்ந்தனர்.

## அணிந்துரை அரங்கம்

### சைவ சமய சித்தாந்த வினாவிடை விநாயகர்

ஆக்கியோன்:
பண்டிதர் த. சுப்பிரமணியம்
வட்டுக் கிழக்கு, சித்தன்கேணி
திருமுறைக்கழக வெளியீடு.
அச்சுப் பதிவு:
ஸ்ரீ சண்முகநாத அச்சகம்;
யாழ்ப்பாணம்;

விநாயகர் என்பதன் பொருள் தனக்கு மேலாக ஒரு நாயகன் இல்லாதவர். பிரணவ சொரூபமாகவுள்ளவர். அவரை வணங்குகின்றவர்களுக்கு செல்வமுண்டாகும், எடுத்த கருமம் இலகுவில் கைகூடும். சிறந்த கருத்துக்களை உரையாடல் கைகூடும். பெருமையுண்டாகும். தேகாரோக்கியம் திகழும். வனப்பு மிகும்.

இக்கால மாணவர்கள் விநாயகப் பெருமானிடத்தில் பக்தி பூண்டு மெய்யடியவர்களாகவாழ்தற்கு இந்நூல்பேருதவியாகவிருக்கும். விநாயகர் தோற்றம், மகிமை பூசை முறை வழிபடும் முறைகள் பல நூல்களின் கருத்துக்களைக் கொண்டு விளக்கப் பெற்றுள்ளன. சமய நம்பிக்கையற்ற மாணவர்கள் சமயிகளாதற்கு ஆதாரமான நூல் இதுவாகும். ஆசிரியர் முன்னும சைவ சமய நூல்கள் ஆக்கியுள்ளார். இன்னும் அத்தகைய நூல்களை எழுதிச் சைவத் தொண்டும் தமிழ் மொழித் தொண்டும் புரிய இறைவன் அநுக்கிரகஞ் செய்வாராக.

## கந்தபுராணபடனம்

சைவபரிபாலசபை ஆதரவில் சபை நாவலர் மண்டபத்தில் நடைபெறுகின்ற கந்தபுராண படனத் தொடரில் 17-1-71 ஞாயிற்றுக்கிழமையன்று யுத்த காண்டம் ஆரம்பமாகி நடைபெறுகின்றது

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M B 8648
செல்விநாதர் காசிநாதர்
புத்தூர் கிழக்கு
—வழக்காளி
எதிராக
சின்னத்தம்பி கந்தையா
அச்சுவேலி தெற்கு
—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 8648-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1971-ஆம் ஹு மாசி மீ 15-ம் திகதி (15-2-71) திங்கட்கிழமை முற்பகல் 10-30 மணிதொடக்கம் அந்தககாணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபாய் 1,780/-ம், 1 - 12 - 66 தொடக்கம் 4-7-67 வரைக்கும் ரூபாய் 1000/-க்கு 12% வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 260-99

ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி புத்தூர் கோவிற்பற்று புத்தூர் தெற்கு இறை 'கோணுவலெய்தோட்டமும் கிலம்' வி. பர. 5வீடும் கிணறும் செய்பயிர் வான்பயிர்களும் இதற்கெல்லை கிழக்கு தம்பு பெண் மாணிக்கத்தின் ஆதனம், வடக்கு செல்வச்சந்நிதி கோவிலாதனம், மேற்கு வேலு மாணிக்கருக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், தெற்கு கதிரன் பெருமாளுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், இதில் சொரியலாய் (1/2) அரைவாசி

சு. கந்தசாமி
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
19. சுவாமியார்வீதி
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்
எம். 467 22-1-71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
வழ இல: M B 11142
மண்கும்பான், கந்தையா சோமசுந்தரம் —வழக்காளி
எதிராக
1 மண்கும்பான் மேற்கு நாகேந்திரர் வேலாயுதபிள்ளை
2 பெண் தவமணியும், தற்சமயம் சரவணை
—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B- 11142ம் இலக்க வழக்கின்படி எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விவரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1971-ம் ஹு தை மீ 30-ம் திகதி (30-1-71) சனிக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபாய் 959/-ம் 29-9-69 தொடக்கம் 2-3-70 வரைக்கும் ரூபாய் 500/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 273-40

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பகுதி ஊர்காவற்றுறை கோவிற்பற்று சரவணையிறை "இத்தின்றமயிலப்புலம்" வி. பர. 6 (கிலப்பரப்பு 6) வீடும், பனைகள், வடலிகளும், செய்பயிர்களும், இதற்கெல்லை வடக்கும் கிழக்கும் சின்னத்தம்பி மயில்வாகனத்திற்குரிய ஆதனம், மேற்கு சங்கரப்பிள்ளை இராசையாவிற்குரிய ஆதனம், தெற்கு கந்தையா பெண் செல்லாச்சிக்கும் செல்லையா கணபதிகளுக்கும் உரிய ஆதனம். இதன் பதிவு யாழ்ப்பாணம். C 306/194

இ. சு. தர்மரத்தினம்
கொமிஷனர் & விலைமதிப்பாளர்
46, 3-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
M, 471 22—1—71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல: M. B. 5528 D. C. J.

1. சவிரிமுத்து அமிர்தராசா
2. கவுரியல் சூசைப்பிள்ளை
3. பெண் மரியம்மா

ஸ்ரேசன் ரேட், யாழ்ப்பாணம். —வழக்காளிகள்
எதிராக
1. பேதுறு அந்தோனிப்பிள்ளை 2. பெண் திரேசம்மா 3. சந்தியாப்பிள்ளை பர்னுந்து துரைராசா 4 பெண் புஸ்பம் 5. முதலி தேவசகாயம் 6-ம் எதிரியின் (இறந்த) உரித்தாளன். 6. பெண் செபமாலை ஸ்ரேசன் ரேட்டு, யாழ்ப்பாணம், 7. மேரி பெனடிக்ற், ஆஸ்பத்திரி ரேட், யாழ்ப்பாணம், 8. வல்லிபுரம் சிவகுரு, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.
—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 5528-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1971ம் ஹு தை மீ 28-ம் திகதி (28-1-71) வியாழக்கிழமை பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 8064/-ம் 28-3-63 தொடக்கம் 15-7-68வரைக்கும் ரூபா 6.00/-க்கு 9% வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 622-67 சதம் ஏற்பட்ட செலவு ரூபாய் 454-52 சதம் முடிவான செலவு ரூபா 115-80 சதம் நிகழவிருக்கும் செலவு ரூபாய் 52-35 சதம்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சுண்டிக்குளி கோவிற்பற்று கரையூர் இறை கொண்டைமாண்டி தோட்டம் கிலப்பரப்பு 4 குளி 3 வீடும், கிணறும் வான்பயிர் செய்பயிர்களும் எல்லை கிழக்கு கொன்வென்ற் ரேட்டு வடக்கு ஆஸ்பத்திரி ரேட்டு மேற்கு பாவிலு கைம்பெண் விக்ரோறியாவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், தெற்கு ஆ. தோமஸ் இடங்கலிற் சொரியலாய் ½ பங்கும்.

இந்திரபவனம், மா. முருகேசு J. P.
புங்குடுதீவு. கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
T. 196 22—1—71

## Commission Sale
## கோட்டுக் கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில். வழக்கு இல: 8089

1. வல்லிபுரம் பொன்னுத்துரை கரவெட்டி மேற்கு,
எதிராக —வழக்காளி
1. முருகுப்பிள்ளை சுப்பிரமணியம் அல்வாய் தெற்கு.
—எதிராளி

மேற் குறித்த இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கொம்மிஷன் அதிகாரப்படி இதன் கீழ் விபரிக்கப்படுமாதனத்தை 1970-ம் ஆண்டு பெப்ரவரிமீ 25-ந் திகதி (25-2-71) சனிக்கிழமை முற்பகல் 9-30 மணி தொடக்கம் குறித்த ஆதனத்திடமாகவிருந்து என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி கட்டைவேலிக் கோவிற்பற்று அல்வாய் மணி விரலாகுதேவன் குறிச்சியிறை பள்ளியவததை வி. பர. 18 கிணறும், எல்லை கிழக்கு எனக்கும் (எதிராளி) மறுபேருக்குமுரிய ஆதனம், வடக்கு சிதம்பரம் அம்பலவாண சுவாமி கோவிலாதனம், மேற்கு ஆள்வார் கார்த்திகேசுவிற்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், தெற்கு கார்த்திகேசர் சிதம்பரப்பிள்ளையின உரிமைக்காரருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், இவ்வெல்லைக் குட்பட்ட கிலத்தில் சொரியலாய் தொண்ணூறில் பதினாறு பங்கில் அரைவாசியும், கிணற்றிலிதற்குரிய பங்கும் வழிவாய்க்காற் பாவிப்புரித்தும்.
(மதிப்பிட்ட விலை ரூபா 1/2 of 16/90 of 18 Lms V. C. - 1, 3/5Per Rs. 1600/-)

| | |
|---|---|
| தீர்வைத்தொகை: | ரூபா 1576-00 |
| வட்டி ரூபா 1000/-க்கு 10 வீதப்படி 25-2-64 தொடக்கம் 31-11-64 வரை | 75-00 |
| வட்டி ரூபா 1651/-க்கு 5 வீதப்படி 1-12-64 தொடக்கம் 6-12-70 வரை | 495-30 |
| வட்டி ரூபா 2146/-க்கு 5 வீதப்படி 6-12-70 தொடக்கம் விற்பனவு வரை | 22-35 |
| மொத்தம் ரூபா | 2168-65 |

சிவலிங்கநிலையம், க. நல்லலிங்கம்
வி. மு. ரேட், ஏல விற்பனையாளர் & விலைமதிப்பாளர்.
பருத்தித்துறை, 16-12-70. எம். 465 22—1—71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1. திருநாவுக்கரசு சிவராசாவும் பெண்
2. மனோரஞ்சிதமும், இருவரும் உரும்பிராய்

வழ. இல: M. B. 10655 எதிராக —வழக்காளிகள்
1. சபாரத்தினம் விவேகானந்தராஜாவும் பெண்
2. இராஜேஸ்வரியும், இருவரும்
கரந்தன், நீர்வேலி —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 10655ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விவரிக்கப்படும் இரு துண்டுக காணிகளை 1971-ம் ஹு மாசிமீ 13-ம் திகதி (13-2-71) சனிக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 8991-66ம், 2-3-69 தொடக்கம் 17-5-70 வரைக்கும் ரூபாய் 6500/-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 405-30

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்கு கோப்பாய் கோவிற்பற்று நீர்வேலி இறை "கலகிட்டகேணி" வி. பர. 14 குளி 14, 11/17 இது உத்தரவு பெற்ற உலாந்தா என். தம்பினுல் தயாரிக்கப்பட்டு 1963-ம் வருடம் ஆனி மாதம் 24ம் திகதியிடப்பட்ட 1479ம் இலக்கப் படத்தில் 2ம் இலக்கத் துண்டு எனக்காட்டப்பட்டுள்ளது. இந்த கிலப்பரப்பு பதினுலும் குளி பதினுலும் பதினென்றின் கீழ் பதினேழும் விசாலங் கொண்ட ஆதனத்தின் எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு தேவசகாயத்தின் ஆதனம். மேற்கு மூத்துத்கமபி தேவராசாவுககும் பெண் பாறுபதிக்கும் உரிமையான 1ம் இலக்கத் துண்டு தெற்கு ஊரெழு — நீர்வேலி ரேட்டு. இதடங்கலிற் சொரியலாய் (½) அரைப் பங்கும் அதைச் சேர்ந்தவைகளும்.

2. மேற்படி புத்தூர் கோவிற்பற்று அச்செழு இறை "தீம்பிலப்புலம்" வி. பர. 40 இதில் தென்கிழககு நோக்கி நடுப்பகுதியில் கிலப்பரப்பு 3¼ம் ஒரு தென்னை மரமும், இந்த கிலப்பரப்பு மூன்றேகாலுக்கும் எல்லை கிழக்கு நாலுமுழு அகலங் கொண்ட ஒழுங்கை வடக்கு கிணற்றுக்குச் செல்லும் வழியும் வாய்க்காலும் மேற்கு கதிரவேலு சிவபாதலிங்கம் பெண் பத்மலோசனியின் ஆதனம், தெற்கு ரேட்டு. இதடங்கலிற் சொரியலாய் (1/2) அரைப்பங்கும் வழிவாய்க்கால் அர்வையிற் பாவிப்புரித்தும்.

19 சுவாமியார் வீதி, சு. கந்தசாமி
கொழும்புத்துறை கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்
யாழ்ப்பாணம். எம் 466 22—1—71

### ஸ்ரீ மாயூரப்பெருமான் திருக்கோயில்
### (இராமநாதபுரம் தாலுக்கா — பிரப்பன்வலசை)

ஷெ கோயில் கும்பாபிஷேகம் சாதாரண ஆண்டு தைத் திங்கள் 18ம் நாள் (31-1-71) ஞாயிற்றுக்கிழமை நிகழும்,

28-1-71 வியாழக்கிழமை காலை 7-30 மணி அனுஞ்ஞை விக்கினேசுவர பூசை
29-1-71 வெள்ளிக்கிழமை காலை 8 மணி யாகபூசை
30-1-71 சனிக்கிழமை காலை 8 மணி யாகபூசை
31-1-71 ஞாயிற்றுக்கிழமை 8-30 மணி முதல் 10 மணிக்கு மகா கும்பாபிஷேகம்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
வழ: இல. M. B. 10036

நெடுந்தீவு. நெடுந்திவு மேற்கு,
1 நாகலிங்கம் ராமநாதனும் பெண்
2 கமலமும் —வழக்காளிகள்
எதிராக
நெடுந்தீவு. நெடுந்தீவு மேற்கு
1 கருப்பையா கந்தசாமியும் பெண்
சேதுப்பிள்ளையும் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10036ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஐந்து துண்டுக்காணிகள் 1971ம் ஆண்டு பங்குனி மாதம் 5ந் திகதி 5-3-71) வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு முதலாம் காணியும், 9-30 மணிக்கு இரண்டாம் காணியும், 10 மணிக்கு மூன்றும் காணியும், 10-30 மணிக்கு நாலாம் காணியும், 11மணிக்கு ஐந்தாம் காணியும் முறையே அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 1000/- இன்னும் 5—6 68 தொடககம் 22-8-69 வரைக்கும் ரூபா 500/-க்கு 12 வீத வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 234-56 சதம்

ஆதனங்களின் விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பிரிவு மேற்கு நெடுந்தீவு கோவிற்பற்று "தாண்டிவயல்" பர. கில. லா 38 வீடு கிணறு பயிர்களுடன் இதற்கெல்லை கிழக்கு கந்தையா பெண் தில்லைப்பிள்ளைககும் பங்காளருககும் ராமனுதர் ஆறுமுகத்துக்கும் பங்காளருக்கும் மற்றவர்களுக்குமுரிய ஆதனங்கள் வடககு ரேட்டு, மேற்கு சோமசுந்தரம் பெண் தெய்வானைக்கும் கந்தப்பு பெண் தெய்வானைக்கும் மற்றவர்களுக்குமுரிய ஆதனம், தெற்கு பசுபதி பெண் நாகுகுட்டிக்கும் பங்காளருககுமுரியவாதனம இதடங்கலில் பிரிவிடப்படாத 1/8 பங்கு பதிவிலக்கம் C 298/135

2 ஷெ யூர் "மலாயன்குளம் அல்லது மலாயன்குளமடைப்பு' பர. கில. லா. 20 பனைமரங்கள் வடலிகளுடன் கிழககு சடையர் முருகேசுவுக்கும் பங்காளருககுமுரிய வாதனம், வடக்கு வைத்தியநாதர் கந்தையாவுககும் பங்காளருககும் சண்முகம் பசுபதிக்கும் பங்காளருக்குமுரிய வாதனங்கள். மேற்கும் தெற்கும் சுப்பிரமணியம பெண் தங்கம்மாவுககும் பங்காளருக்குமுரியவாதனம் இதடங்கலில் பிரிவிடப்படாத 83/540 பங்கு பதிவிலக்கம் C. 268/06

3 ஷெ யூர் 'நந்தன் தறை' பர. கில. இலா 20 கிணறு வீடு பயிர்களுடன் இதற்கெல்லை கிழக்கு பசுபதி பெண் வள்ளியம்மைககும் பங்காளருககுமுரிய ஆதனம், வடக்கு பசுபதி பெண் வள்ளியம்மைககும் பங்காளருக்குமுரிய ஆதனம், மேற்கு ராமலிங்கம் பெண் வள்ளியம்மைககும் பங்காளருங்குமுரிய ஆதனம் அதற்குளடங்கிய வீடு கிணறு தென்னை மரங்கள் பிற நீங்கலாக இதடங்கலில் பிரிவிடப்படாத 1/14 பங்குமதைச் சேர்ந்தவைகளும். பதிவிலக்கம் C 298/136

4 ஷெ யூர் 'குண்டன்ஏளுவாரம்' பர கில இலா 40 இதற்கெல்லை கிழக்கு முடிக்குரிய காணியும் வயித்தி ஐயம்பிள்ளைககுமுரிய ஆதனம். வடக்கு ராமநாதன் சுந்தரம்பிள்ளைக்கும் பங்காளருககுமுரிய ஆதனம். மேற்கு வைரவனுதர் சின்னத்தம்பிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், தெற்கு ஆறுமுகம் வைத்திலிங்கத்துக்கும் பங்காளருக்கும் முடிக்குமுரிய ஆதனங்கள், இதடங்கலில் பிரிவிடப்படாத 1/48 பங்குமதைச் சேர்ந்தவைகளும் பதிவிலக்கம் C 209/113

5 ஷெ யூர் 'முடமாவிலங்கம் தோட்டம்' பர கில இலா 6 இதற்கெல்லை கிழககு ராமநாதர் கணபதிப்பிள்ளைக்கும் பங்காளருககுமுரிய ஆதனம், மேற்கு ராமனுதர் நாகனுதருககும் பங்காளருககுமுரிய ஆதனம். வடககு மூததவன் கதர்காமனுக்கும் பங்காளருககுமுரிய ஆதனம் தெற்கு காகப்பர் ராமனுதருக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், இதடங்கலில் பிரிவிடப்படாத ¼ பங்குமதைச் சேர்ந்தவைகளும் பதிவிலக்கம் C 174/141

133 பருத்தித்துறை ரேட்டு, செ. விசாகரெத்தினம்,
நல்லூர், யாழ்ப்பாணம், கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
19—1—71 எம். 468 22—1—71

# 3-ர் உலகத்தமிழ்மாநாடு

— தொகுத்தளித்தவர்: திரு. சூ. க. சுப்பிரமணியன் —

(முன்வளர்ச்சி — 4)

**சங்க இலக்கியங்கள்:**

கம்ப்யூட்டரைப் பயன் படுத்திய, சங்க இலங்கியங்களின் கால நிர்ணயத்தை உறுதிப் படுத்தும் முயற்சி மிகவும் அழகாக வர்ணிக்கப் பட்டது. மூற்பட்ட காலம் பிற்பட்டகாலம்என இரண்டு பிரிவாக சங்ககால இலக்கியங்களின் காலம் நிர்ணயிக் கப்பட இம்முறை பயன் படுகிறது.

மற்றுமொரு ஆராய்ச்சியாளரான திரு. பண்ணீர் செல்வய் கம்ப்யூட்டரின் உதவியுடன் சங்க இலக்கியங்களின் காலத்தை நிர்ணயிக்கும் முறைபற்றி மிகவும் அழகாக விளக்கியுள்ளார் மொத்தச் சங்க செய்யுள்கள் 2381. 1368 பக்கங்கள் கொண்ட புத்தகமாக பாரி நிலையத்தார் வெளியிட்டுள்ளனர். 400க்கு மேற்பட்ட புலவர்களின் பாடல்கள் சங்ககாலத்தாயினும் சங்கத்தில் இடம்பெறவில்லை. தமிழ் எழுத்துக்களை கிட்டத்தட்ட சரியான ஆங்கில வடிவாக்கி அவற்றை கம்ப்யூட்டரின் உட்செலுத்தும் மொழிக்கு ஏற்றதாகச் செய்து தமிழ்ப் பாடல்களை கம்ப்யூட்டரின் நாடாவில்பதிவுசெய்து படிப் பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. புதியமுறையைக் கையாண்டு கலிற்றுகை நிரை, மணிமிடை பவளம், நித்திலக்கோவை ஆகியவற்றின் பாடல்கள் கம்ப்யூட்டரால் கால நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.

பேராசிரியர் மு. வரதராசனுர் சங்க இலக்கியங்களில் ஒரு வகையான குறியீடுகள் இருப்பதைப்பற்றிய ஆராய்ச்சித் தொகுப்பைத் தந்தார்.

(வளரும்)

**மணவாளக்கோல உற்சவம்**

கோப்பாய் வீரபத்திர சுவாமி கோவிலின் இவ்வருட மணவாளக்கோல வைபவம் 31-1-71 அன்று நடைபெறும்.

## திருமதி நடராஜன் அன்னபூரணி

எங்கள் இந்துசாதனப் பத்திரிகையினது உதவிப் பத்திராதிபராகச் சிலகாலம் கடமைபுரிந்தவரும் சிவதொண்டன்பத்திராதிபருமாகிய வித்துவான் க. கி. நடராஜன் B. O L., Dip in Educ அவர்களது அன்புக்குரிய பாரியாரும், பிரசித்திபெற்ற புராண வுரையாசிரியர் நவாலி ஸ்ரீ தம்பையா உபாத்தியாயர் அவர்களது புத்திரியுமாகிய திருமதி நடராஜன் அன்னபூரணி அவர்கள் 19-1-71 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தனர். அம்மையார் ஸ்ரீ யோகர் சுவாமி அவர்களது நல்லாசியைப் பெற்றுத் தமது கணவனுருடைய சமயப் பணி தமிழ்ப்பணிக்கு அருந் துணைபுரிந்து இல்லறத்தை முறையாக நடத்திவந்தவர். சங்கீதத்திலும் வல்லுனர். அடக்கம், அன்பு ஈகை ஈசுரபக்தி நிறைந்தவர். அவருடைய ஆன்மா சாந்தியடைவதாக.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

ஊர்காவற்றுறை நீதிவெண்ற் கோட்டில்.

காரைநகர் மேற்கு
பொன்னன் முருகன் மகள்
சந்தனம்
இல. 9236. — வழக்காளி

எதிராக:

காலஞ்சென்ற காரைநகர்கிழக்கு முத்துசாமி நாராயணசாமியினதும் பெண் சிதம்பரத்தினதும் ஆதனங்களின் பராமரிப்புக்காரன் மருத்திவடைய்பு ஊர்காவற்றுறை மேற்கு ஊர்காவற்றுறை நாராயணசாமி சோமசுந்தரம் — எதிராளி

ஊர்காவற்றுறை நீதிவெண்ற் கோட்டின் 9236ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகள் என்னுல் 1971ம் ஹூ மாசி மீ 27ம் திகதி சனிக்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை-:
முதல்வட்டி ரூபா: 737/50ம் ரூபா: 500/-க்கு 12-12-1969 தொடக்கம் 10-5-1970 வரைக்கும் 10 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா: 71/50 சதம்.

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பகுதி காரைதீவு கோவிற்பற்று களபூமியிறை "கூனன்கலட்டி" பா. நி. இல. இரண்டு (பா நி. இல. 2) எல்லை கிழக்கு தம்பிப்பிள்ளை பெண் சிவகாமிப்பிள்ளையின் ஆதனம் வடக்கு: நன்னி விசுவலிங்கத்திற்கு, காசிநாசிங்கம் பெண் சுமத்திரைக்குமுரிய வாதனங்கள் மேற்கு ஒழுங்கை தெற்கு முருகமூர்த்தி கோவிலுக் குரியவாதனம். இதடங்கலும்.

2 ஷெ இறை "கூனன்கலட்டி" பா. நி. இல. இரண்டரை (பா. நி. இல. 2½) எல்லை கிழக்கு இலட்சுமணர் பெண் சிவகாமிப் பிள்ளைக்குரிய வாதனம் வடக்கு கணபதிப்பிள்ளை சதாசிவத்திற்கும் மங்காளகர்ளுக்குமுரியவாதனம். மேற்கு ஒழுங்கை தெற்கு சின்னத்தம்பி வேலுப்பிள்ளைக்குரிய வாதனம். இதடங்கலும்.

வை. ஏரம்பமூர்த்தி
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
காரைநகர்.
1971-ம் ஹூ தை மீ 3ம் திகதி

## அடைவு நகை ஏலவிற்பனவு விளம்பரம்

அரசாங்க உத்தரவுடன் யாழ்ப்பாணம், சிவன் வடக்கு வீதி. 125/1ம் இலக்கக் கடையில் அடைவு பிடிக்கும் நா. ஞானசம்பந்தன் அவர்களின் அடைவு கடையில் 12-11-69 தொடக்கம் 31—12—69 வரைக்கும் அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும் நகைகள் யாவும் என்னுல் 1971ம் ஹூ பங்குனி மீ 1ம் திகதி (1—3—71) திங்கட்கிழமை முற்பகல் பத்து மணிதொடக்கம் ஷெ அடைவு கடையில் இருந்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காரைநகர் — வை. ஏரம்பமூர்த்தி
1970-ம் ஹூ மார்கழிமீ 20-ம் திகதி. ஏல விற்பனையாளரும்.
எம். 470 22—1—71 கொமிசனரும், விலைமதிப்பாளரும்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1 ஐயாத்துரைக் குருக்கள் விஸ்வனுதக் குருக்களும் பெண்
2 செல்லம்மாவும, கோவில் வீதி, நல்லூர், —வழக்காளி
வழ: இல. M B 7667 எதிராக
1 சரவணமுத்து சுப்பிரமணியம், ஆவரங்கால் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 7667 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணியை 1971-ம் ஹூ பங்குனி மாதம் 3-ந் திகதி (3-3-71) புதன்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 1320/-ம் 9-9-65 தொடக்கம் 13-2-66 வரைக்கும் ரூபாய் 1000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 193-50ம் இதில் ரூபா 500/- நீக்கி

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி புத்தூர் கோவற்பற்று ஆவரங்கால் இறை 'இறமறையான் சீமா அறியான் சீமாவும் மற்றும் துண்டுகளும்' வி. பர. 4¾ எல்லை கிழக்கு இதின்கீழ் கூறப்படும் இரண்டாம் காணி வடக்கு ஒழுங்கை, மேற்கு சரவணமுத்து சோமசுந்தரம் பெண் இராசம்மாவின் ஆதனம், தெற்கு கந்தசாமி சுப்பையாவின் ஆதனம். Regd: K 232/103

2. ஷெ இறை குஞ்சன் வளவு' வி. பர. 6½ எல்லை கிழக்கு எதிராளி சரவணமுத்து சுப்பிரமணியத்துக்கும் மாணிக்கவாசகர் தயபிசாவுக்குமுரிய ஆதனம், வடக்கு எதிராளி சரவணமுத்து சுப்பிரமணியத்தின் ஆதனம், மேற்கு மேல் கூறப்பட்டிருக்கும் முதலாம் ஆதனமும், கந்தையா சுப்பையாவின் ஆதனமும், தெற்கு கந்தசாமி சுப்பையாவின் ஆதனம் இவையடங்கலுள் சொரியலாய் (3/4) நாலில் மூன்று பங்கும் எல்லாத் தென்னை மரங்களும் மற்றும் பிரயோசனத்தில் (3/4) நாலில் மூன்று பங்கும். Regd: 200/256

நாரந்தனை தெற்கு,
ஊர்காவற்றுறை, 20—1—71.

J. A. எட்வேட்,
கொமிஷனர் & விலைமதிப்பளார்
எம். 472 22—1—71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

குஞ்சன் கந்தையா, கருகம்பிராய் —வழக்காளி
இல: M B 9655 எதிராக
1 வேலுப்பிள்ளை பொன்னுத்துரையும் பெண்
2 பாக்கியமும், தங்கோடை, காரைநகர் மேற்கு
காரைநகர் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 9655 ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1971-ம் ஆண்டு பங்குனிமீ 6-ம் திகதி (6-3-71) சனிக்கிழமை முற்பகல் 11-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 2076/-ம் 28-12-67 தொடக்கம் 3-7-69 வரைக்கும் ரூபாய் 1500/-க்கு 9 வீத வட்டியும அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 256-87

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் காசிப் பகுதி காசிக் கோவிற்பற்று பெரிய காந்தன் இறை "வெரிய பாந்தன் காடு" ஏக்கர் 27ம் ரூட் 2ம் பேர்ச 26ம் இதில் வடக்குப் பக்கமாய் முன் விற்கப்பட்ட ஏக்கர் 2½யும தவிர்த்து மிகுதியாயுள்ள ஏக்கர் 25ம் பேர்ச 26ம இது அரசாங்க கூலாந்தாப் பகுதியால் அளவிடப்பட்ட நம். I. P. S 8 எனும் படத்தில் முதலாம் துண்டு (Lot No 1) இதன் எல்லை கிழக்கு வீதிக்கும் வாய்க்காலுக்குமாய் ஒதுக்கப்பட்ட ஆதனம், வடக்கு இதன் மிகுதிக் காணி, மேற்கு P. P. A. 1020ம் படத்தில் 13ம் துண்டு (Lot 13) ஆறுல் தற்போது வீதி, நம். D O, 1413 இல கழித்து வைக்கப்பட்ட காணி. இவையடங்கலும் அதற்குச் சொந்தமானவைகளுடன்.

நாரந்தனை தெற்கு,
ஊர்காவற்றுறை
2-1-71

J. A. எட்வேட்,
கொமிஷனர் & விலைமதிப்பாளர்
எம். 473 22—1—71

## காரைநகர் ஸ்ரீ அருணுசல உபாத்தியாயர் நினைவு நிலைக்குக

சைவத் தமிழாசிரியர்களைத் தோற்றுவித்த ஸ்ரீ அருணுசல உபாத்தியாயர் நினைவு தினம் காரைநகர்ச் சைவ மகா சபையின் ஆதரவில் சுப்பிரமணிய வித்தியாசாலையில் திரு. மு. கு. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் 17-1-71 பி. ப 4 மணி முதல் நடைபெற்றது.

தலைவர் தமது தலைமையுரையில் அருணுசல உபாத்தியாயர் சைவாசிரிய கலாசாலையைத் தாபிப்பதற்காக முப்பதாண்டுகள் அரும்பாடுபட்டார் என்றும், அதன்பயனுக கோப்பாய் ஐக்கிய போதனு பாடசாலை தாபிக்கப் பட்டதென்றும் தொடர்ந்து பேசுகையில் சைவப் பகுதியை திரு. அருணுசலமவர்கள் திறம்பட நடத்தினுர் என்றும் இது மாத்திர மல்ல கிராமங்கள் தோறும் சைவப் பாடசாலைகள் பெருக வேண்டு மெனவிருப்பி ஒவ்வொரு கிராமத்துக்குஞ் சென்று ஆங்காங்கு செல்வப் பிரபுகள்மூலம் சைவப்பாடசாலைகளைத் தாபிக்கச் செய்தார் என்றும் குறிப்பிட்டார். ஆறுமுக நாவலர் சைவத்தையும் தமிழையும் வளர்த்தார். அருணுசலமவர்கள் சைவாசிரியர் களையும் சைவாசிரிய பயிற்சிக் கலாசாலையையும் தோன்றுவித்தார் என்றுங்கூறினுர்.

சுப்பிரமணிய வித்தியாசாலைக்கு அருகாமையிலுள்ள குமிழங்குழி ஒழுங்கைக்கு 'ஸ்ரீ அருணுசல உபாத்தியாயர்வீதி'' என நாமம் பொறிக்கப்பட்ட தூணை திரு அ. காசிநாதன் அவர்கள் நாட்டி வைத்ததோடு அருணுசல உபாத்தியாயர் அவர்களின் சேவைகளைப் பாராட்டியும் பேசினுர்.

திரு. நா சுப்பிரமணியம், திரு வே சுப்பையா (மட்டுவில்) திரு. சு. ஆ. விநாயக சிவம்பிள்ளை, திரு கு. செல்லையா, திரு. மு. ஆ. கந்தையா என்போர் உபாத்தியாயர் பணிகள் பற்றிப் பல கோணங்களிலிருந்து பாராட்டுரை வழங்கினுர்கள்.

ஈற்றில் சபைச் செயலாளர் திரு. சிவபாதம் அவர்கள் திரு அருணுசலமவர்களே, நாவலர் தோற்றுவித்த சைவப் பாடசாலைக்கு பயிற்சிபெற்ற சைவாசிரியரை உதவினுர்களென்றும், சைவ வித்தியா விருத்திச் சங்கத்தை நடாத்திய திரு. இராசரத்தினமவர்களை அப்பணிக்குப் பயிற்றிவிட்டவர்களென்றும் கூறியதோடு, அப்படிப்பட்ட பெரியாரை யாழ்ப்பாணச் சைவ உலகம் மறந்துவிட்டமை மிக இரங்கத்தக்கதென்றும் தமது கருத்துக்களைத் தெரிவித்தார்கள். ஈற்றில் தலைவர் - பேச்சாளர்கள், பாடசாலைத் தலைமையாசிரியர் சமுகமானேர் முதலானவர்களுக்கு நன்றி கூறினுர்கள். பாராட்டுத் தந்திகள், கடிதங்கள் படிக்கப்பட்டன. மாலை 6 மணிக்கு தேவாரத்துடன் விழா நிறைவாயது.

**நாவலர் நல்வாக்கு**

தரித்திரனுய் இருக்கும் போது திருத்தி அடையாதவன், செல்வனுய போதும், திருத்தியடையான்; திருத்தியடையாமை மனக் குற்றமே அன்றிப் பொருட் குற்றம் அன்று. ——

## சிந்திப்பாரில்லை ?



பக்தர் "செல்வத்தின் மிதமான தன்மையினுல் ஏற்பட்ட இடாம்பீக வாழ்வில் கிடையாத அமைதியையும், நல்லதன்மைகளையும் பெறுவதற்கு யோகாசனம் வழிகாட்டுகிறது''என்று அமெரிகக ஆத்மயோகசீடர்கள் யாழ் திவ்விய ஜீவன சங்க வரவேற்பின்போது கூறினுர்களாமே?

சித்தர்: "அப்பப்பா; எவ்வளவு அரிய உண்மைகளையெல்லாம் கூறினுர்கள் தெரியுமா? மன அமைதியின்றி இன்று எத்தனை பேர் அவஸ்தைப் படுகிறுங்க! "யோகக் கலையை'' முறையாக நாடெங்கும் பரப்ப உடன்முயற்சி மேற்கொள்ள வேண்டும்; வானெலி, பத்திரிகைகள், திரைப்படங்கள் யாவும் பிரசாரத்துக்குப்பயன்படுத்தப்படவேண்டும்; நாட்டுக்கு இன்று வேண்டும்பணி இதுஎன்று யார்சிந்திக்கிருர்கள்?

"நாயன்மார் - நாதன்"

## நன்கொடை

காலஞ்சென்ற, வடகோவை திருமதி வினுசித்தம்பி சிவஞான பூங்கோதை அம்மையார் ஞாபகமாகச் சைவபரிபாலன சபைக்கு நன்கொடையாக வழங்கப்பெற்ற ரூபா 10/- பெற்றுக் கொண்டோம். —தனுதிகாரி
சைவபரிபாலன சபை

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணர்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில்; 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 22—1—1971 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர் திரு. மு. மயில்வாகனம் அவர்கள்